சொன்னார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் தருகிற தகவலை ஏற்றுக்கொள்கிறேன். சீர்காழி தாலுகாவில் சரியான முறையில் தண்ணீர் கிடைக்காமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கிணறுகளுக்கு மின்சார சப்ளையும் கிடைக்கவில்லை. மின்சார இலாகா இந்த அமைச்சருடைய துறையில் வரவில்லை என்று சொன்னாலும் முழுமையாக அந்தப் பகுதி பாதிக்கப்படாத அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நான் விவரமாகப் படித்தேன். அங்கு பயிரிடுவதற்காக இருக்கக்கூடிய மொத்தப் பரப்பே 31,000 ஏக்கர்தான் 60,000 ஏக்கர் அல்ல. 3,500 ஏக்கர் பாதிக்கப்பட்டதாகச் சொல்லவில்லை. 3,500 ஏக்கரில் மட்டுந்தான் குள்ளக்கார் சாகுபடி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது என்று கூறினேன். ஆனால் சாகுபடியாளர்கள் தங்கள் சொந்தப் பொறுப்பில் 8,000 ஏக்கரில் குள்ளக்கார் சாகுபடி செய்திருக்கிறார்கள். அப்படி இருந்தும் அந்த 8,000 ஏக்கருக்கும் சாகுபடிக்குப் போதிய தண்ணீர் கொடுக்கப்பட்டிருப்பதாகத்தான் அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது. மேற்கொண்டு அங்கத்தினர் அவர்கள் சொன்னதைப்பற்றி விசாரிக்கிறேன்.

(ஆ) விசையேற்றங்களுக்கு மின்சாரம் கிடைக்காத **விவசாயிகள்** சாகுபடி செய்ய இயலாமையும் அவர்களிடமிருந்து கடன் வசூலை **நிறுத்தி** வைக்க வேண்டியதன் அவசியமும் குறித்து.

திரு. சோ. அழகர்சாமி : செங்கற்பட்டு மாவட்டத்தில் உலக பாங்க் கடன் வசதித் திட்டத்தின்கீழ் கடன் பெற்று கிணறு வெட்டி பம்ப் செட் பொருத்திய ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு மின்சப்ளை கிடைக்காததால் சாகுபடி செய்து பலன் பெறாத விவசாயிகளிடம் கடன் வசூலுக்காக அரசு ஜப்தி நடவடிக்கை எடுப்பதால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைப் போக்கி பலன் பெறும் வரை கடன் வசூலை நிறுத்திவைக்க வேண்டிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவரவர்களே, கடன் வாங்கியவர்களிடமிருந்து (விசையேற்றங்களுக்கு மின் இணைப்புப் பெறாதவர்களிடமிருந்து) நிலுவைகளை வசூலிப்பது குறித்து செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள தொடக்க நிலவள வங்கிகள் வலுக்கட்டாய நடவடிக்கைகள் ஏதும் மேற்கொண்டுள்ளதாக இதுவரை கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை என்று செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். **மேலும்** விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படாத நேர்வுகளில், **கடன்**

1974 ஏப்ரல் 9] [திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா]

நிலுவைகளை வசூலிப்பது ஒத்திப் போடப்பட வேண்டுமென்றும், கீழ்க் காணும் நேர்வுகளில் மேற்கொண்டும் ஆணைகள் பிறப்பிக்கப்படும் வரையில் வலுக்கட்டாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படக்கூடாதென்றும் சென்னை, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் வங்கிகளுக்கு ஏற்கனவே கட்டளை யிட்டுள்ளார்:—

(அ) மேற்சொன்ன கட்டளைகளை முன்னிட்டு மேற்கொண்டும் கடன்கள் வழங்கப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தால்;

(ஆ) கடன்கள் வழங்கப்பட்டு, ஆனால் நிறுவப்பட்ட மின்சார மோட்டார்களுக்கு, மின் இணைப்புக் கொடுக்கப்படாமலிருந்தால்;

ஆயினும், கடன் வாங்கியவர்கள் கடன் செலுத்தும் நிலையில் இருந்தால், மேற்சொன்ன வகைகளின் நேர்வில் வலுக்கட்டாய நடவடிக்கை எடுக்காமலேயே வசூல் செய்வதற்கு ஆட்சேபணை ஏதுமில்லை என்றும் பதிவாளர் கட்டளையிட்டுள்ளார்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் அனைத்து நாட்டு வளர்ச்சிச் சங்கத் திட்டத்தையும் வேளாண்மை மறு நிதியுதவிக் கழகத் திட்டங்களையும் செயல்படுத்தும் தொடக்க நிலவள வங்கிகள் யாவும் மேற்சொன்ன கட்டளைகளைப் பின்பற்றுமாறு ஏற்கெனவே அவற்றிக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஜப்தி நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னார்கள். செங்கை மாவட்ட விவசாயி களிடத்திலிருந்து எனக்கு இரண்டு கடிதங்கள் வந்திருக்கின்றன. ஜப்தி நடவடிக்கை காரியங்களில் இறங்கியிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. மின்சாரம் ஒருசில இடங்களில் விட்டு விட்டுக் கொடுக்கப்படுகிறது. பொதுவாக மின்சாரம் தொடர்ச்சியாகக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவர்கள் பலன் பெற்று கடனைத் திருப்பிக் கொடுக்க முடியும். வசதியுள்ளவர்களிடமிருந்து வசூலிப்பதைப் பற்றிக் கவலையில்லை. மற்ற விவசாயிகளிடமிருந்து வசூலிப்பதை அவர்கள் பலன் பெறும் வரையில் பொறுத்திருந்து அதற்குப் பிறகு வசூலித்துக்கொள்ள வேண்டும். ஆகவே, ஜப்தி நடவடிக்கை இப்போது எடுக்கக்கூடாது என்று அரசு உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவரங்களைத் தந்தால் விசாரித்து நடவடிக்கை எடுக்கிறேன். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இதை அடிப்படையாக வைத்து வசதி

படைத்தவர்கள் கூட கொடுக்க முன்வரவில்லை. கோவை மாவட்டத்தில் ஒரு விவசாயி கட்ட முன்வரவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் அதைப்பற்றி விசாரித்தபோது அவர் பெரிய மிராசுதாரராக இருக்கிறார் என்பது தெரிய வந்தது. அப்பேர்பட்டவர்களும் கொடுக்க முன்வர மாட்டேன் என்கிறார்கள். கோவை மாவட்டத்திலும், செங்கற்பட்டு மாவட்டத்திலும் பெரிய மிராசுதாரர்களாக இருப்பவர்கள்கூட கொடுக்க முன்வரவில்லை. ஆகவே, நியாயமான குறைகளைச் சொன்னால் அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். வசதி உடையவர்கள் கட்டாமல் இருந்தால் மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள் அவர்கள் கட்ட வேண்டுமென்று கட்டாயப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(4) அறிவிப்புகள்.

(அ) அலுவல் ஆய்வுக் குழுவிற்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டப் பேரவை 193 (1)-வது விதியின்கீழ் பின்வரும் சட்டப் பேரவை உறுப்பினர்களை 1974-75-ம் ஆண்டின் அலுவல் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கிறேன் :—

1. மாண்புமிகு முதலமைச்சர்.
2. மாண்புமிகு பேரவை முன்னவர்.
3. மாண்புமிகு திரு. க. அன்பழகன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.
4. மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து, அரிசன நலத் துறை அமைச்சர்.
5. மாண்புமிகு திரு. செ. மாதவன், தொழிற் துறை அமைச்சர்.
6. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.
7. திரு. து. ப. அழகமுத்து, தலைமை அரசுக் கொறடா.
8. திரு. ஆர். பொன்னப்ப நாடார்.
9. திரு. க. உரோ. எட்மண்ட்.
10. திரு. ஏ. ஆர். பெருமாள்.
11. திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்.
12. திரு. ஏ. ஆர். மாரிமுத்து.